★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 29உ திங்கள் (12—3—56) ★ ★ வெளியூர்: மாசி 30உ செவ்வாய் (13—3—56) [இதழ் 230

'வானப்பிரஸ்த ஆசிரமம்'

அகமதாபாத், மார்ச் 11—

படித்தவர்களாம்; பழுத்த வயதினராம்; 150 பேர் ஒன்று சேர்ந்து ஒரு 'ஆசிரமம்' துவக்குகிறார்களாம்; அதற்கு 'வானப் பிரஸ்த ஆசிரமம்' என்று பெயராம்!

இந்த 'ஆசிரம'ங்களில் வாழ்க்கையில் வேலை செய்து ஓய்வு பெறறுள்ள பெரியவர்கள் தங்கள் எஞ்சிய காலத்தை சுகமாகக் கவலை இன்றிக் கழிக்கமுடியுமாம்!

இந்த ஆசிரமங்களில் நவீன கால வசதிகள் இருக்குமாம். தங்குவதற்கும், உண்பதற்கும், மருத்துவ வசதிகள் பெறுவதற்கும் பணம் தரவேண்டியிருக்குமாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

கூட்டணி கண்டு காமராசரின் திகில்

ஈஜிப்டு நாட்டுச் சிலைபோல் இருந்த அவரை ஓடி ஓடிப் பேசவைப்பது எது?

அர்த்தால் தந்த பலன் அவருக்கென்ன தெரியும்?

கூட்டணியை சிதைக்க ஆளவந்தார் செய்த சதி

கல்லூரியில் பேசிய அவர் கடற்கரையில் பேசத் தயாரா?

சென்னையில் அண்ணு அறைகூவல்

சர்வகட்சிக் கூட்டணியில் கண்ணியம் இருந்தது; அதனுல் அது மேற்கொண்ட நடவடிக்கைக்கு வெற்றி கிடைத்தது.

"இந்தக் கண்ணியம் மிகுந்த கூட்டணியைக் கண்டு திகில் கொண்டு, கூட்டணிமீது மெத்தக் கோபம் கொண்டிருக்கிறார்—சென்னை மாநிலத்தை ஆள்வதாக எண்ணிக் கொண்டிருக்கும் காமராசர்!

"அவரது கோபத்தைப் பார்த்து நான் சிரிக்கிறேன்; அவரது கோபத்தை நான் துச்சமென மதிக்கிறேன்—அவரது போக்கைத் தமிழ் நாட்டார்ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் கடந்த பிப். 20-ல், தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பதால்!

"லயோலா கல்லூரியில் சென்று, கூட்டணியின் குட்டை உடைத்துவிட்டதாகப் பத்திரிகையில் பார்த்தேன்.

"கல்லூரியிலே சென்று அரசியல் பிரச்சினைகளை அலசிக் காட்டிய காமராசருக்குக் கூறுகிறேன்—திருவல்லிக்கேணி கடற்கரையில் கூட்டம் போடுங்கள்—உங்களையும் எனக்குத் தெரியும்; என்னையும் உங்களுக்குத் தெரியும்—அங்கே கூட்டணியின் 'போலித்தன்மை'யை இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் சொல்லுங்கள்—என்னையும் அங்கே பேசுவதற்கு அனுமதியுங்கள்; அப்படிச் செய்வதானுல் அதற்கு அரசியல் என்று பெயர்.

"எந்தக் கல்லூரியில் நாங்கள் நுழைந்தால் தீட்டுப்பட்டுவிடும் என்று அங்குள்ள பேராசிரியர்கள் கருதுகிறார்களோ, எந்தக் கல்லூரிக்குச் சென்றால் நாங்கள் அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறோமோ அங்கே சென்று, எங்களைத் தூற்றியிருக்கிறார் காமராசர்.

"காமராசரே! கிடைத்துள்ள வாய்ப்பை இழந்துவிடாமல், கல்லூரிகளுக்குப் போய் வாருங்கள்; எங்களைத் திட்டுவதற்காகவாவது போய்வாருங்கள். ஆனுல், அங்கே யாரிடத்திலே பேசுகிறோம் என்பதை மறவாமல் பேசுங்கள்.

"அந்தக் கல்லூரி மன்றத்தில் நீங்கள் எழுந்து பேசும்போது, அங்கே இந்த நாட்டின் எதிர்கால முதன் மந்திரிகள் வீற்றிருக்கிறார்கள்; இந்த நாட்டின் இராணுவத்தை நடத்திச் செல்லத்தக்க பெரும் படை வீரர்கள் அமர்ந்திருக்கிறார்கள்; மந்திரிகள் செய்யும் தவறுகளை மூடி மறைக்கும் மேலதிகாரிகள் வீற்றிருக்கிறார்கள்—என்பதை மறவாமல் பேசுங்கள்.

"அது மட்டுமோ, அந்த மாணவ மன்றத்திற்குரிய பெருமை? அங்கே சரித்திரம் அறிந்தவர்கள், பூகோளம் தெரிந்தவர்கள், கணக்குக் கற்றவர்கள் வீற்றிருக்கிறார்கள் 'என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டாமா?

"அந்த மன்றத்தைப் பார்க்கும்போது காமராசருக்கு நெஞ்சின் அடிவாரத்தில் ஒரு அரிப்பு இருந்திருக்க வேண்டும்; 'இதுதானே கல்லூரி?—என்று அவர் எண்ணியிருக்க வேண்டும்.

"காலாகாலத்தில் கிடைக்காமற் போய்விட்ட பயனை—மந்திரி பதவி பெற்ற பயனைத்தான் குறிப்பிடுகிறேன்—மற்றேதும் எனக்குத் தெரியாது—அந்தப் பயனைக் காட்டிக் கொள்ள கல்லூரிக்குச் சென்றால், யாரிடம் எதைப் பற்றிப் பேசுகிறோம் என்றெண்ணியிருக்க வேண்டாமா?

"பி. டி. இராசன், கலகக்காரரா? காமராசர் கலகக்காரராகக் கருதப்பட்ட காலத்தில் சட்டத்தைக் காத்தவர், அவர்;

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நாக மாணவர் நால்வர் கைது

நாக மாணவர்கள் நால்வரைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

ஷில்லாங் பள்ளிகளில் கல்வி பெறும் அவர்கள், இன்ன குற்றத்திற்காக என்று தெரிவிக்காமல் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம். நாகமலை மாவட்டத்தைக் குழப்பமிருந்த பகுதி என்று பிரகடனம் செய்யப்பட்ட பிறகு, முதன் முதலாக இப்போதுதான் மாணவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதாம்.

சென்னை மாநிலத்தில் ஒரு காகித ஆலையை எந்த இடத்தில் ஏற்படுத்தலாம் என்பதுபற்றித் தற்போது ஜெர்மன் நிபுணர் குழு ஒன்றும், இத்தாலிய நிபுணர் குழு ஒன்றும் பரிசீலனை செய்து வருகிறதாம்!

திரு-கொச்சி: குடியரசுத் தலைவரின் நேரடி ஆளுகைக்கு உட்படும்?

மந்திரிசபை வீழ்ந்ததின் எதிரொலி

திருவனந்தபுரம், மார்ச் 12—

திரு-கொச்சியின் பனம்பள்ளி கோவிந்த மேனன் மந்திரி சபை இராஜினமாச் செய்துவிட்டதை யொட்டி அங்குக் குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சி தவிர்க்க முடியாததாக விருப்பதாகக் கூறப்படுகிறது.

ஒரு சாரார், பட்டம் தாணு பிள்ளையே மீண்டும் காங்கிரசின் ஆதரவு பெற்று மந்திரி சபை அமைக்கக்கூடும் என்று கூறுகின்றனர்.

சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஆறு பேர் விலகிவிட்டதை ஒட்டி 117 பேர் கொண்ட சட்ட சபையில் காங்கிரசின் பலம் 54 உறுப்பினர் மட்டும் என்ருகிவிட்டதால், முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன், வேறு வழியின்றி தனது இராஜினமாவை நேற்று முன் இரவு 10 மணிக்கு இராஜப்பிரமுகரிடம் தந்திருக்கிறார்.

வேறு ஏற்பாடுகள் நடைபெறும் வரையில், பனம்பள்ளி மந்திரி சபையே தொடர்ந்து பதவியில் இருக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது எனத் தெரியவருகிறது.

பனம்பள்ளி மந்திரி சபை, சென்ற ஆண்டு பிப்ரவரி திங்கள் 14-ம் நாள் பதவி ஏற்று, 405 நாள் மட்டுமே பொறுப்பில் இருந்தது.

பட்டம் தாணு பிள்ளை மந்திரி சபைக்குக் காங்கிரஸ் தந்துவந்த ஆதரவை நிறுத்திக்கொண்டு, அவரை வீழ்த்தி, பனம்பள்ளி பதவிக்கு வந்தார்.

தேர்தலுக்குப் பின் அமைந்த இரண்டாவது மந்திரி சபையும் ஓராண்டிற்குமேல் நீடிக்க முடியாது போய்விட்டிருக்கிறது.

நினைவில் தங்கும் எழிற்காட்சி

கழகத் திடலில் முதல் நிகழ்ச்சி

பல்லாயிரவர் பங்குகொண்ட மாபெரும் பொதுக்கூட்டம்

திராவிட மக்கள் தங்கள் விடுதலைக்காக அமைத்துள் பட்டாளமான தி. மு. கழகத்தின் நடவடிக்கைகள் பலவற்றுள்ளும் குறிப்பாக என்றென்றும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவை பல; அவற்றுள் ஒன்ருக அமைவதுதான், சென்னை நுங்கம்பாக்கத்தில் கழகம் தனக்கென திடல் ஒன்று வாங்கியிருப்பது; அந்தத் திடலில் முதன் முதலாக நடைபெற்ற நினைவுகொள்ளவேண்டிய நிகழ்ச்சி, கடந்த பிப். 20ல் நடைபெற்ற 'அர்த்தாலுக்குப் பிறகு' ஏற்பட்டுள்ள நிலைகளை விளக்குவதற்காக மார்ச் 10-ந் தேதியன்று நடைபெற்ற சிறப்புமிகு கூட்டமாகும்.

திடலின் நுழைவு வாயிலில், விழா ஏற்பாடுகள்போல வரவேற்பு வளைவுகள், கொடிகள், தோரணங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

திடலின் இருமருங்கிலும் எண்ணற்ற இருவண்ணக்கொடிகள், திராவிடரை 'வருக, வருக'வென அசைந்தாடி வரவேற்றுக் கொண்டிருந்தன.

மேடை, எப்போதும் அமைந்திராவண்ணம் புதுமையாக: சிறப்பாக அமையப் பெற்றிருந்தது. ஏராளமான மின்விளக்குகள் ஒளி உமிழ்ந்தவண்ணம் மிளிர்ந்தன.

கழகத் தலைமை நிலையமே நடத்திய இந்தக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள், பலநூறு தாய்மார்கள் உட்படக் கலந்துகொண்டனர்.

அண்ணு, பொதுச்செயலாளர் உள்ளிட்டு பல முன்னணி வீரர்களும் கூட்டத்தில் பங்கு பெற்றனர்.

கழகத் திடலில் நடைபெற்ற அந்த மாபெரும் கூட்டம், கண்டோரது நினைவில் என்றென்றும் தங்குவதாகும்.

கூட்டத் துவக்கத்தில் தோழியர் ஜி கஸ்தூரி கழகப் பாடல்கள் பல பாடினர்.

கூட்டத்திற்கு தலைமை ஏற்று சிறப்புற நடத்தித் தருமாறு தோழியர் அலமேலு-அப்பாதுரை அவர்கள், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களைக் கேட்டுக் கொண்டு, முன்மொழிந்து சிறிது நேரம் பேசினர்.

அதனை தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், வீ முனுசாமி ஆகியோர் வழிமொழிந்து பேசினர்.

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை ஏற்று கூட்டத்தின் நோக்கத்தையும், முக்கியத்துவத்தையும் தெளிவாக விளக்கினர்.

பொதுச்செயலாளருக்குப் பச்சையப்பன் கல்லூரி தி. மு. கழக மாணவர் கிளையின் சார்பில் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அர்த்தாலை நடத்திய கூட்டணி அமைப்பு குறித்தும், அதன் நோக்கங்கள் குறித்தும் 'அர்த்தாலும் கூட்டணியும்' என்ற தலைப்பில் விளக்கினர்.

அடுத்து, தோழர் கே. ஏ. மதியழகன் 'அர்த்தாலும மாணவர்களும்' என்ற தலைபபில், அர்த்தாவில் மாணவர்கள் நிறைவேற்றிய பெரும் பங்கினைச் சிறப்பித்துக் கூறினர்.

அர்த்தாலில் கழகக் கிளைகளின் பணி என்னவாயிருந்தது? எந்த அளவு இருந்தது? என்பதை அளவிட்டுக் காட்டினர் தோழர் கண்ணதாசன்.

அர்த்தாலைப் பற்றி இந்த மாநிலத்தில் உள்ள பத்திரிகைகள் என்ன நினைத்தன? எப்படி எல்லாம், அர்த்தாலுக்குத் தரவேண்டிய முக்கியத்துவத்தைக் குறைத்து இருட்டடிப்புச் செய்தன?—என்பதை விளக்கினர் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம்.

அர்த்தாலில் முன்னேடிகளாக விளங்கிய தொழிலாளர்களுக்கு நன்றி கூறினர், சி. பி. சிற்றரசு.

வியாபாரிகள் கடையடைப்புச் செய்து கூட்டணியின் வேண்டுகோளை நிறைவேற்றி, அர்த்தாலை வெற்றி பெறச் செய்தமைக்குக் கழகச் சார்பில் வியாபாரிகளுக்கு நன்றி கூறினர், தோழியர் சத்தியவாணி-முத்து.

அர்த்தாலின்போது ஆட்சியாளர் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறைகளை வர்ணித்தார், தோழர் மு. கருணநிதி.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—3—'56 திங்கள்

கல்லூரியில் கூச்சல்!

உயர்நிலைப் பள்ளி தலைவாயிலினும் எடுத்தடி வைத்தறியாத விருதை விசித்திர மனிதர் காமராசர் அவர்களுக்கு, உலகக் கலைகள் அனைத்தும் கொஞ்சி விளையாடக் கூடிய கல்லூரிகளில் கூச்சலிடும் வாய்ப்புக் கிடைக்கிறது என்றால்—அது எதனால்? அவர் கனமாகக் காட்சி அளிப்பதில் உள்ள மகத்துவம் அல்லவா அதற்குக் காரணம்?

முதலமைச்சராக இல்லாதிருந்தால், துவக்கப்பள்ளி ஆசிரியரும் கூட அவரை ஏறெடுத்தும் பாரார்—சிந்தவும் செய்யார். காமராசர் ஒரு கனமாகக் கோலம் பூண்டிருக்கின்றதால், லயோலா கல்லூரித் தமிழ்ப்பேரவையில் பேசும் நிலையும் அவருக்கு ஏற்பட்டு இருக்கிறது.

தமிழ்ப் பேரவையின் வாழ்த்தும் வரவேற்பும் பெற்ற அவர், குடியேறியுள்ள இடத்திற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு நடந்துகொண்டு இருந்தால் கனத்தின் கல்லாமையும், கற்றுத் தெளியாமையும் இவ்வளவு வெளிச்சமாகத் தெரிந்திருக்க முடியாது.

முதலமைச்சராக இருந்து பேசவேண்டிய பொறுப்பும் கடமையும் இருந்துங்கூட, சட்டசபையில் அரியாசனத்து அசையாப் பதுமைபோல் வீற்றிருந்து வெளியேறும் பெரும் பணியினைத் திறம்படச் செயலாற்றி வருவது போன்று, கல்லூரிப் பேரவையிலும் கனம் காமராசர் நடந்துகொண்டு இருத்தல் வேண்டும். அதுவே முறை—அவர் அறியாமை, தகுதியின்மை ஆகிய குறைபாடுகள் பிறருக்குப் புலனாகாமல் தடுப்பதற்குரிய சிறந்த மார்க்கம்!

சட்ட சபையில் பேசா மடந்தையாக இருப்பதினால் இழிவும் பழியும் வந்தடைகிறதே என்பதைக் குறித்துத் துளியும் கவலை கொள்ளாதது போன்றே, கல்லூரிப் பேரவையிலும் வாய் திறவாது நாற்காலிக்கு ஏற்ற அலங்காரப் பதுமையாக இருந்து, அலுவல் முடிந்ததும், அவ்விடம் விட்டு அகன்றிருக்க வேண்டும். அவ்வாறு இருந்தாலாவது அடக்கமுடையவர், அமைதியானவர், நிறைகுடம் என்றெல்லாம் விஷயமுணராதவர் கனத்தைப் பற்றிப் புகழ்ச்சியாகப் பேசிக்கொண்டு இருப்பர். அவ்வாறும் நடந்துகொள்ளவில்லை கனம் காமராசர்.

கல்லூரிப் பேரவையில் கல்வியின் பல பிரிவுகள் பற்றி பேசுவதற்குரிய திறம் அவரிடத்து இல்லையானாலும், அங்கு பேசிய மாணவ மணிகளின் கருத்தை ஒட்டியாவது சில பல கூறிவிட்டு, தமது வாயை காமராசர் மூடிக்கொண்டு இருக்க வேண்டும். அதையும் அவர் விரும்பவில்லையானால், தமது அரசாங்க ஞானகிரியரிடமிருந்தாவது ஏதாவது எழுதித் தரச் சொல்லி, அதையாவது எழுத்துவிடாமல் வாசித்துத் தொலைத்திருக்கவேண்டும். அதுவும் அவருக்குச் சிரமமானதாக தெரியும்பட்சத்தில், 'மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிக்கவேண்டும்-விடாமுயற்சியுடன் படிக்க வேண்டும்' என்று, தட்டுத்தடுமாறியாவது கூறிவிட்டு, பேரவையின் பாராட்டுதலைக் காமராசர் பெற முயன்றிருக்க வேண்டும்!

ஆனால், கனம் காமராசரோ? 'அரசியல் விவகாரங்களை மாணவர்கள் அறிந்துகொள்ளலாம்; அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால், கட்சி அரசியல் பூசல்களில் தலையிடக்கூடாது; அது மாணவப் பண்பிற்குப் பொருந்தாது' என்று இன்றைய பண்டித நேரு முதல், முச்சந்தி காங்கிரஸ் சுப்பன்வரை செப்பிவரும் சிறப்புரையாக இருந்துவருகிறது. அவ்வாறு இருக்கும்போது, கட்சி அரசியல் பூசல் பற்றி தமது நெஞ்சுக் கொதிப்பைக் கொட்டியாற்றிக் கொள்வதற்குக் காமராசர், கல்லூரிப் பேரவையை, ஏற்றதோர் சாதனமாகக்கொண்டது, கண்டிக்கத்தக்கது — அதுவும் வன்மையாக.

கட்சி அரசியல் பூசல் கல்லூரிகளில் தலைகாட்டக்கூடாது என்று அரசாங்கக் கல்வித் துறையினர் கண்டிப்பாக இருக்கின்றனர். அதற்கு ஆதரவான சட்ட விதிகளைச் சுட்டிக்காட்டி மாணவர்கள் அச்சுறுத்தவும்படுகின்றனர்.

ஆனால், கட்சி அரசியல் பூசல்களில் கருத்தைச் செலுத்துவதிலிருந்து மாணவர்களைத் தடுத்து நிறுத்தவேண்டிய கடமை, அனைவரையும்விட அதிகமாக உடைய முதலமைச்சர், லயோலா கல்லூரி மாணவர்களிடை கட்சி அரசியல் கொந்தளிப்பிற்கு வித்திட்டிருக்கிறார். மாணவர்களிடை விபரீதமாக நடந்து கொண்டு இருக்கிறார்.

அவர், அங்கு தமிழ்ப் பேரவையில் பேசிய பேச்சுகளோ, முச்சந்தியில் முப்பதே முப்பது பேர்களை மட்டுமே வைத்துக் கொண்டு பேசப்பட்டுவரும் காங்கிரஸ் பொதுக்கூட்டத்துப் பேச்சாகும். பேசிய கருத்தோ, மாற்றுக் கருத்தினரின் கோபத்தைக் கிண்டிக்கிளறக்கூடிய தரக்குறைவானபேச்சாகும். அவர் பேச்சைக் கேட்டு, அங்குக் குழுமி இருந்த மாணவர்கள் சீறிஎழுந்து பதில் கூற முனைந்திருந்தாலும், அதற்காக மாணவர்கள்மீது குறைப்பட்டுக்கொள்வதற்குத் துளியும் நியாயம் கிடையாது. ஆனால், மாணவர்களோ, முதலமைச்சரினும் பொறுமையும், சிந்தித்துச் செயலாற்றும் சீரும் பயின்று வருபவர்கள் என்பதைக் காட்டிக்கொண்டுள்ளனர். நாடாளும் நாயகரிடம் காண முடியாத நற்குணம், மாணவ மணிகளிடை உண்டு என்பதை, தம் அருஞ்செயலால் நிலைநாட்டிக் காட்டிய லயோலா கல்லூரி மாணவர்களை, மாணவர் உலகம் பாராட்டியே தீரும்.

கட்சி அரசியல் பற்றி பேசக்கூடாது என்ற கட்டுப்பாட்டைப் பொதுவாகக்கல்லூரிகள் அனைத்தும் மேற்கொண்டு ஒழுகிவந்தபோதிலும், அப்பண்பைக் காத்து நடந்துகொள்வதில் லயோலா கல்லூரி முன்னணியில் இருப்பதாகும் என்று சொல்லப்படுவதுண்டு. அம்மரபிற்கு, நீடிய புகழுக்கு, அழிக்க முடியாத மாசை ஏற்படுத்திவிட்டிருக்கிறார், முதலமைச்சர் காமராசர்.

சைதை ஆசிரியர் கல்லூரியையும், லயோலா கல்லூரியையும் கட்சி அரசியல் பூசல்கள் மோதக்கூடிய போர்க்களமாக்கும் பெரும் பணியினை செய்திருக்கிறார், காலதோஷத்தால் முதலமைச்சர் பீடத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கிற காமராசர். கல்லூரி தமிழ்ப் பேரவையில் அவர் பேசியுள்ள பேச்சு பற்றி பின்னர் ஆராய்வோம்.

கண்டலா துறைமுகம்

பம்பாய்க்குப் போட்டியாக வேகமாய் வளர்க்கப்படுகிறது!

புதுடில்லி—

கண்டலா துறைமுகம் புதியதாக உருவாக்கப்பட்டு, பல வகையிலும் பம்பாய்க்குப் போட்டியாக வேகமாக வளர்க்கப்படுகிறது.

'துறைமுக கண்ட்ரோல் ராடார்' சாதனங்கள் இப்போது அங்கு நிறுவப்படுவதின் மூலம் நவீன வசதிகள் அங்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன.

நவீன சாதனங்களைப் பொருத்துவது குறித்து உதவிமந்திரி ஓ. வி. அளகேசன் டில்லி மக்கள் சபையில் தகவல் தந்திருக்கிறார்.

"வரும் 1951 மார்ச் 31-ந் தேதிக்குள் ரூ. 5·16 இலட்சம் செலவில் புதிய சாதனங்கள் பொருத்தப்பட்டுவிடும்,"

என்று, மந்திரி தகவல் தந்திருக்கிறார்.

'கராச்சியை இழந்து விட்டோம்' என்றுகூறி, அதைச் சரிக்கட்ட அமைப்பதாக வருணிக்கப்பட்ட கண்டலா துறைமுகம், இப்போது பம்பாய்க்குப் போட்டியாக வளர்கிறது.

கல்லூரி மாணவர் கிளர்ச்சி

18 பேர் சிறை புகுந்தனர்

திருவனந்தபுரம் ஆயுர்வேதக் கல்லூரி மாணவர்கள், சில கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதம் போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டதை ஒட்டி, அத்துமீறி சர்க்கார் கட்டிடத்திற்குள் புகுந்ததாக 18 மாணவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அவர்கள் அனைவரும் தங்களுக்கு விதிக்கப்பட்ட ரூ 20 அபராதம் கட்ட மறுத்து 10 சிறைத் தண்டனையை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவின் கிராமக் கைத்தொழில்களுக்கு உதவி

மேற்கு ஜெர்மன் சர்க்கார் முன்வந்திருக்கிறதாம்!

இந்தியாவில் சிறு கைத்தொழில்கள், கிராமக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு மேற்கு ஜெர்மன் சர்க்கார் உதவியளிக்க முன்வந்திருப்பதாகவும், ஆனால், அது சம்பந்தமாக ஒப்பந்தம் எதுவும் எதுவும் செய்துகொள்ளப்படவில்லை என்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறையில் அரசியல் கைதிகள் நடத்தப்படும் முறை

சென்னை சட்ட சபையில் கோவிந்தசாமி கண்டனம்

இன்று மந்திரிகளாயிருப்போர் அன்று பெற்ற வசதிகளைச் சுட்டிக்காட்டுகிறார்

"மந்திரி சபையிலுள்ள எட்டு மந்திரிகளில் ஏழு பேர் சிறை அனுபவமுள்ளவர்கள். ஆகவே, அவர்கள் சிறையிலிருந்தபோது எத்தகைய சௌகரியங்கள் வேண்டுமென்று விரும்பியிருக்கிறார்கள்—கேட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கம் அந்தக் காலத்தில் காங்கிரஸ் கட்சியை ஒடுக்குவதற்கு எந்தெந்த முறைகளைக் கையாண்டதோ, அதே முறையில் இப்பொழுது காங்கிரஸ் அரசாங்கமும் எதிர்க்கட்சியினர் விஷயத்தில் நடந்து கொள்ளுகிறது.

"குறிப்பாக, நிதி மந்திரி அவர்கள் இப்பொழுது சிறை மந்திரியாகவும் இருக்கிறார். அவரும் ஒரு காலத்தில் சிறையில் இருந்தவர்தான். நிதி அமைச்சர் சிறையில் இருந்த காலத்தில் பாட்டுப் பாடியதாகக்கூடச் சொல்கிறார்கள். பிரிட்டிஷார் காங்கிரஸ் கட்சியை ஒடுக்குவதற்கு அந்தக் காலத்தில் என்னென்ன தொல்லைகள் கொடுத்து வந்தார்களோ, எந்தெந்த அடக்குமுறைகளைக் கையாண்டு வந்தார்களோ அவைகளிலிருந்து ஒரு அணுவளவுகூட வழுவாது காங்கிரஸ் அரசாங்கம் எதிர்க்கட்சியினரை நடத்தி வருகிறார்கள் என்பதை நிதி மந்திரி அவர்களும் மறுக்கமுடியாத நிலையில் சிறையினுடைய நிர்வாகப் போக்கு இருந்துவருகிறதென்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

"பிரிட்டிஷார் காலத்தில் காங்கிரஸ் கட்சி அன்றைக்கு எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில், சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் 1942-வது வருடத்திய சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டு சிறைக்குச் சென்றிருந்தபோது, அங்கு அவர் தூங்குவதற்குக் கோசுவலை கொடுக்காவிட்டால் படுக்கமாட்டேன் என்று சொன்னதன்பேரில் கோசுவலை கொடுக்கப்பட்டதாகப் பத்திரிகையில் வந்த செய்தியைப் படித்திருக்கிறோம்.

'அதுமாத்திரம் அல்ல; காங்கிரஸ்காரர்கள் சிறையில் இருந்தபோது அவர்கள், மோருக்கு எப்படி சண்டை போட்டிருக்கிறார்கள்; எப்படி செய்திகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். அன்றைக்கு அத்தகைய சலுகைகளைக் கேட்ட அவர்கள் இன்றையத் தினம் அரசியல் கைதிகளை எப்படி நடத்துகிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். இப்பொழுது அரசியல் கைதிகளுக்கு பத்திரிகைகள் படிக்கும் வசதிகள் மறுக்கப்படுகிறது. ஆனால், சில பத்திரிகைகளைக் கொடுக்கிறார்கள்; அப்படிக் கொடுக்கும்போது பத்திரிகைகளில் மையைத் தடவிக் கொடுக்கிறார்கள். அவ்வாறு மையைத் தடவிக்கொடுப்பானேன்? அரசியல் கைதிகளுக்குச் செய்திகள் தெரியவேண்டியதில்லையா? இப்படி அவர்களுக்கு மையைத் தடவிக் கொடுத்தாலும் அந்தக் கைதிகளுக்கு செய்திகள் தெரியாமல் இல்லை. அவர்களுக்கு எப்படித் தெரிகிறது என்றால், காங்கிரஸ்காரர்கள் சிறையில் இருக்கும்போது அவர்கள் எப்படி செய்திகளைத் தெரிந்துகொண்டார்களோ அப்படித்தான் இப்பொழுதும் கைதிகள் செய்திகளைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். நிலைமை அப்படி இருக்கும்போது, அவர்களுக்குக் கொடுக்கப்படும் பத்திரிகைகளில் மையைத் தடவிக் கொடுப்பானேன்? இனிமேலாவது பத்திரிகைகளில் மையைத் தடவாமல் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,"

—என்று தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் 8—3—56ல், சட்டசபையில் சிறை மானியக்கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:—

"இப்பொழுது 'சப்-ஜெயிலி'ல் விசாரணையிலிருக்கும் கைதிகளுக்கு நாலு 'அவுன்ஸ்' அரிசியும், இரண்டு அவுன்ஸ் களியும் கொடுக்கிறார்கள். 'ரேஷன்' காலத்தில் தான் இப்படி கொடுத்து வந்தார்கள்; இப்பொழுது 'ரேஷன்' எடுக்கப்பட்டுவிட்டது. இப்பொழுதும் 'ரேஷன்' காலத்தில் கொடுத்த அளவில் கொடுக்கவேண்டுமா? ஏன் இந்த அளவில் கொடுக்கவேண்டும் என்பது புரியவில்லை. அதிகமாகக் கொடுத்தால் அரசாங்க வருமானத்தில் குறைந்துவிடுமா என்று கேட்கிறேன்.

"சப் - ஜெயிலில், தண்டனை விதிக்கப்படாத கைதிகளை மிகவும் கேவலமாக நடத்துகிறார்கள். அவர்களுக்கென்று சிறையில் இரண்டு சட்டிகளை வைத்திருப்பார்கள் அவைகளில்தான் அவர்கள் சிறுநீர், மலம் கழிக்கவேண்டும். அதைப்பற்றி இந்தச் சபையில் சொல்லுவது என்னுலேயே வெட்கமாக இருக்கிறது. ஒரு அறையில் சுமார் 20 பேர் இருப்பார்கள். இவ்வளவு பேர்களும் இந்த இரண்டு சட்டிகளில்தான் மலஜலம் கழிக்கவேண்டும். இரவு ஆறு மணிக்கெல்லாம் அவர்களை சிறைகளில் அடைத்துவிடுகிறார்கள். இரவு நேரங்களில் அவர்களுக்கு மலஜலம் கழிக்க வேண்டுமென்றால் அவர்கள் எல்லோரும் ஒரே சட்டியில்தான் கழிக்கவேண்டும்; காலையில் ஏழு மணிக்குத்தான் சிறிதுநேரம் வெளியில் விடுகிறார்கள்.

"சிறை அறைகளைப் பெருக்குவதே கிடையாது; ஒரே துர்நாற்றம் அடிக்கிறது.

"கைதிகளுக்குக் கம்பளி கொடுக்கிறார்கள்: அந்தக் கம்பளியில் 'சீலைப் பேன்' இருக்கிறது; துர்நாற்றமும் அடிக்கிறது அவைகளையெல்லாம் கைதிகள் சகித்துக் கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது.

"சுவர்களுக்கு வெள்ளையடிப்பதே கிடையாது. 'பினைல்' தெளிப்பதே கிடையாது. வைத்திய வசதியே கிடையாது. சுகாதார நிலைமை நன்றாக இருக்கும்படியாக ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமாக

(4-ம் பக்கம் பார்க்க)

மக்களின் கோரிக்கைக்கு மதிப்பு

ஆந்திர சர்க்காரின் ஆரம்ப அணைத் திட்டம்

மாபெரும் மதகுகளுடன் உருவாகிறது

தென்னாட்டில் கிருஷ்ணா நதி மிகப் பெரிய ஒரு நதி. கோதாவரிக்கு அடுத்தபடி அதுதான் மிகவும் பெரியது. அதற்குத் தண்ணீர் சேகரமாகிற பிரதேசத்தின் பரப்பளவு 97,050 சதுர மைல். கோதாவரிக்கு 1,16,300 சதுர மைல் கிருஷ்ணா நதி மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கிழக்குச் சரிவில் உற்பத்தியாகி, பம்பாய், ஐதராபாத், ஆந்திரா மாநிலங்கள் வழியாக 800 மைல் தூரம் ஓடி வங்காளக்குடாக் கடலில் கலக்கிறது. சராசரியாக ஒரு வருடத்தில் 380 இலட்சம் ஏக்கரா அடி தண்ணீர் அதில் பாய்கிறது கோதாவரியின் நீரில் அது பாதி. கிருஷ்ணாவில் உச்ச அளவில் வெள்ளமெடுத்துப் பாய்ந்தது 1903-ல் தான்; விஜயவாடாவில் விநாடி ஒன்றுக்கு சுமார் 12 இலட்சம் கன அடி வீதம் அப்போது தண்ணீர் பாய்ந்தது.

கோடை காலத்தில் நதியில் தண்ணீர் குறைந்து விநாடிக்கு 100 கன அடி வீதம் பாயும் இவ்வாறு சில மாதங்களில் வெள்ளப் பெருக்கும், சில மாதங்களில் தண்ணீர் தட்டுப்பாடும் இருப்பதால், நதியை நம்பி வாழும் மக்களின் வாழ்க்கையில் கஷ்டமேற்படுகிறது. எனவே, அவற்றில் பாயும் தண்ணீர் அளவைக் கூடியமட்டிலும் சமப்படுத்துவதற்குச் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் வரவேற்கப்படத்தக்கதாகும்.

அணைக்கட்டு

விஜயவாடாவுக்கு அருகில் கிருஷ்ணா நதியானது ஆறு பர்லாங் கூட அகலமில்லாத ஒரு இடுக்குப் பிரதேசத்தின் வழியாகப் பாய்கிறது. நூறு வருடத்துக்குச் சிறிது அதிகமான காலத்துக்கு முன்னமேயே. அந்த இடத்தில் ஒரு 'வீயர்' அணைக்கட்டு அமைக்கப்பட்டது. அந்த அணையானது 14 அடி உயரமுள்ள கட்டுமானச் சுவராக எழுப்பப்பட்டிருக்கிறது.

1852—55ல் கட்டப்பட்ட அந்த அணை கிருஷ்ணா டெல்டாவில் 58 இலட்சம் ஏக்கரா நிலத்துக்குப் பாசன வசதி செய்வதற்கெனத் திட்டமிடப்பட்டதாகும்.

பாசனத்துக்கு வரவர அதிக அளவில் தண்ணீர் தேவை என்று கோரப்பட்டபடியால், 1925-ல் அந்த அணையின் மீது 6 அடி உயர பலகைக் கதவுகள் பொருத்தப்பட்டு இன்னும் அதிகத் தண்ணீர் சேமிக்கப்பட்டது. அதன் மூலம் இப்போது 11 இலட்சம் ஏக்கராவுக்குப் பாசன வசதி கிடைக்கும்.

கோரிக்கை வலுக்கிறது

பாசனத்துக்குத் தண்ணீர் வேண்டுமென்ற கோரிக்கை மேலும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அதற்காக அணையையும் அடிக்கடி உயரமாக்கித் தேக்கத்தை அதிகரிப்புச் செய்வது சாத்தியமல்ல. அந்த அணை இன்னும் அதிக அமுக்கத்தைத்தாங்கும்படி கட்டப்படவில்லை. இப்போதுள்ள மதகுகளைக்கூட வெகு கவனமுடன்தான் இயக்க வேண்டியிருக்கிறது. கிருஷ்ணா நதி ஆயக்கட்டுப் பிரதேசத்துக்குத் தேவையான தண்ணீர் விடுவதற்கு அணையைவிட இன்னும் 8 அடி அதிக உயரத்துக்குத் தண்ணீர் தேங்க வேண்டும். மதகுகள் 8 அடி உயரம் இல்லாவிட்டால், சதா 2 அடி உயரத்துக்குத் தண்ணீர் மேலே வழிந்து வீணாகிக்கொண்டே இருக்கும். இதை எல்லாம் கவனிக்கும் போது, அணைக்கு மேலே 10 அடி உயரத்துக்கு தண்ணீரைத் தேக்கிநிறுத்தக்கூடிய கட்டுமான வசதி செய்வது அவசியம் என்பது விளங்குகிறது. ஆகையால் அந்த இடத்திற்கு வெகு அருகிலேயே 'பாரேஜ்' அணை ஒன்றை அமைப்பது அவசியம்.

புதிய 'பாரேஜ்' அணையில் 71 'ஸ்பான்' பகுதிகள் இருக்கும்; அவை ஒவ்வொன்றும் 40 அடி அகலம் உள்ளது; அந்த அணைக்கு இருபுறத்திலும் மறிகால் மதகுகள் இருக்கும். வலதுபுறத்தில் எட்டு மதகுகளும், இடதுபுறத்தில் ஆறு மதகுகளும் இருக்கும். மதகு ஒவ்வொன்றும் 17 அடி அகலமும் 12 அடி உயரமும் உள்ளது.

பாரேஜ் அணையின் நீளம் 3,448 அடி; அது இப்போதுள்ள அணைக்கட்டிலிருந்து 60 அடிக்கு மேலே இருக்கிறது. 24 அடி போக்கு - வரத்துப் பாதையும், அதற்கு இருபுறத்திலும் 5 அடி நடைபாதையும் அந்த பாரேஜ்மீது 4,072 அடி நீளத்துக்குச் செல்லும். இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 2,84,00,000 பிடிக்கும்.

பாரேஜ் அணையைத் தாங்குவதற்கான 'பீயர்' சுவர்கள் 8 அடி நீளம் உள்ளவை. அவை மீது 12 அடி உயர மதகுகள் இருக்கும். அவை மின்சாரத்தால் இயக்கப்படும்.

ஆந்திரா சர்க்காரின் முதலாவது அணைத் திட்டம்

தனி ஆந்திரா மாநிலம் ஏற்பட்ட பின் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது திட்டமான கிருஷ்ணா பாரேஜ் திட்ட வேலை 1953 டிசம்பரில் அந்நாள் முதல் மந்திரி டி. பிரகாசத்தால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. சென்ற ஜூன் திங்கள் இறுதி வரையில் மூன்றிலொரு பங்கு வேலை முடிந்திருக்கிறது. அடுத்த ஆண்டு அது உபயோகத்துக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'பாரேஜ்' அணை பூர்த்தியான பின், டெல்டா பிரதேசங்களில் முன்பு அபிவிருத்தி செய்யப்படாத பகுதிகளும், மேல் பாகத்தில் உள்ள பகுதிகளும் பாசன வசதி பெற்றுவிடும். டெல்டா பிரதேசத்தில் நாற்று நடவு வேலை சீக்கிரமாக ஆரம்பமாவதற்கும் அது துணை செய்யும். பழைய அணைக்கு அதிக நீரமுக்கத்தால் ஆபத்து ஏற்படுமோ என்ற அச்சமும் தணிந்துவிடும்.

சென்னை-கல்கத்தா சாலையில் பாலம்

சென்னை - கல்கத்தா பெருஞ்சாலையானது கிருஷ்ணா அணையின் பின்புறப் படுகைத் தளம் வழியாகப் போகிறது. நதியில் தண்ணீர் ஏராளமாக இருக்கிற சுமார் எட்டு மாத காலத்துக்கு ஆற்றைக் கடக்கப் படகுகளைத்தான் உபயோகிக்கவேண்டும். எல்லாப் பருவங்களிலும் நேரடிப் பாதைப் போக்குவரத்தை நடத்துவது சாத்தியமாகும்படி செய்வதற்காக, மத்திய சர்க்கார் கிருஷ்ணா நதிமீது ஒரு பாலம் கட்ட உத்தேசித்தனர். இரயில்வே பாலத்துக்குக் கீழ்ப் பக்கத்தில் அதை அமைக்க உத்தேசிக்கப்பட்டது. அதற்கு ரூ. 80 இலட்சம் செலவு பிடிக்கும்.

இப்போது அந்தப் பாலத்தை புதிய பாரேஜ் அணை மீதே அமைத்துவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதனால், மொத்தம் ரூ. 20,40,000 மிச்சமாகும்.

கிருஷ்ணா பாரேஜ் திட்டம் இதர பெரிய அணைத் திட்டங்களைப்போல் அதிகச் செலவு பிடிப்பதாக இல்லாவிட்டாலும், அந்தச் செலவில் மேற்கொள்ளப்படுகிற இதர திட்டங்கள் மூலம் கிடைக்கிற நன்மைகளுக்குச் சமமான நன்மைகள் இதன் மூலம் கிடைக்கத்தான் செய்யும்.

பீகார் மாணவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம்

'முதல் முறை நடவடிக்கை அநியாயமானதே'

விசாரணைக் குழு கண்டுபிடிப்பு

பீகாரில், கடந்த 1955-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் மாணவர்கள் மீது போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகங்கள் குறித்து விசாரிக்க சர்க்கார் நியமித்த விசாரணைக் குழு, கடந்த ஆகஸ்டு 12-ந் தேதியன்று தேசியக் கல்லூரி அருகில் சுட்டது அநியாயமானது என்றும், ஆனால், 15-ந் தேதியன்று நவாடாவில் சுட்டது நியாயமானதே என்றும் கூறியிருக்கிறதாகத் தெரிகிறது.

விசாரணைக் குழு, தந்த அறிக்கையின் சுருக்கத்தை ரெவினியூ மந்திரி சட்டசபையில் படித்து முடித்தவுடன், காங்கிரஸ், மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சரமாரியான கேள்விகளைக் கிளப்பினர் என்றும், அதை ஒட்டி ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது என்றும், உடனே சபைத் தலைவர் எழுந்து நின்று இவ்விதம் கூச்சல் போட்டால் சபை தொடர்ந்து நடைபெற இயலாது என்று கூறி சபையை இடைவேளைக்கு 15 நிமிடங்களுக்கு முன்பாகவே ஒத்திவைத்ததாயும் கூறப்படுகிறது.

பத்திரங்களில் சாதிப் பெயர்

நீக்குவதற்குச் சட்டம்

புதுடில்லி, மார்ச் 9—

பத்திரப் பதிவு அலுவலகங்களில் பதிவு செய்யும் பத்திரங்களில் சாதிப் பெயர்களைக் குறிப்பிடுவதை அகற்றும் வகையில் 1908-ம் ஆண்டு இந்தியப் பத்திரங்கள் பதிவுச் சட்டத்தில் திருத்தம் செய்ய பி. டி ஹூவா என்ற உறுப்பினர் கொண்டு வந்த திருத்த மசோதாவை ராஜ்யங்கள் சபை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

மக்கள் சபையில் சமந்தா என்ற உறப்பினர் கொணர்ந்த இந்த மசோதா நிறைவேறிவிட்டது.

தமிழகப் பகுதிகளில் பிப்ரவரி 20— பொது வேலைநிறுத்தம்

ஆத்தூர் வட்டம்

அர்த்தாலில் நரசிங்கபுரம், கல்லானத்தம், அம்மம்பாளையம், முல்லைவாடி ஆகிய எல்லாக் கிளைக் கழகங்களும் கலந்துகொண்டன. பொது மக்களும், உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் வேலை நிறுத்தம் செய்தனர். சினிமா, கண்ணாடித் தொழிற்சாலை, நெல் மண்டிகள் எல்லாம் மூடிக்கிடந்தன. தோழர் எம். பி. சுப்ரமணியம், எம்.எல்.ஏ., தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு சந்தைப் பேட்டை மைதானத்தில் தோழர் பி. எம். ரெங்கசாமி தலைமையில் தோழர்கள் ஐ பாஷாகான், எம். பி. சுப்ரமணியம், ஆனைமுத்து, எசி. சுப்பையாஆகியோர்பேசினர்.

பழனி

காங்கிரஸ்காரர்கள் உள்ளிட்ட கடைகள் அனைத்தும் மூடப்பட்டன; கடைகளைத் திறக்கச் சொல்லியும், மிரட்டியும், நோட்டீசுகள் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தும் முழு அர்த்தால் நடைபெற்றது. ஆரம்ப, உயர் வகுப்பு மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. தோழர்கள் பழனியப்பன், பெரியசாமி, கருப்புச்சாமி, ராஜா, கிருஷ்ணமூர்த்தி, வெங்கடாசலம், காளிமுத்து, வீரய்யா, மணி, மாணிக்கம், ஞானம் உள்ளிட்ட 28 பேர் காலை 7½ மணிக்குக் கைது செய்யப்பட்டு, இரவு 9½ மணிக்கு விடுவிக்கப்பட்டனர்.

மாலை 3½ மணியளவில் அடிவாரம் பாதவிநாயகர் கோயிலிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, தேரடித் திடலை வந்து அடைந்தது ஊர்வலத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். உறுதிமொழி வாசித்த பின் கூட்டம் கலைந்தது.

பள்ளத்தாதனூர்

வியாபாரிகள் எல்லோரும் கடை அடைப்புச் செய்தனர். மாலை 5-30 மணிக்கு அண்ணா நிலையத்திலிருந்து ஊர்வலம் வந்தது. இறுதியாக உறுதிமொழி வாசித்து ஏற்றுக்கொண்டு கூட்டம் கலைந்தது

திருச்செந்தூர்

கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டன; காங்கிரஸ் தோழர்களும், போலீசாரும் கடைகளைத் திறக்கச் சொல்லியும் வியாபாரிகள் மறுத்துவிட்டனர். மாலை 4 மணியளவில் ஊர்வலம் முக்கிய வீதிகளின் வழியே வந்தடைந்தது பின்னர் உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கோ[illegible]நாதம்பட்டி

இங்குள்ள எல்லாக் கடைகளும், ஓட்டல்களும் மூடப்பட்டு, முழு அர்த்தால் நடைபெற்றது. மாலை ஊர்வலமும் நடைபெற்று, உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பொய்கை

இங்குள்ள எல்லாக் கடைகளும், பள்ளிகளும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டன; தொழிலாளர்கள் வேலைகளுக்குச் செல்லவில்லை. அர்த்தால் அமைதியாக நடைபெற்றது.

பர்கூர்

உணவு விடுதிகள், மளிகைக் கடைகள் போன்ற எல்லாக் கடைகளும், ரைஸ் மில்கள், சைக்கிள் நிறுவனம், சோடா பாக்டரிகள், எல்லாம் செயலற்று மூடிக்கிடந்தன. காங்கிரஸ் தோழர்கள் வற்புறுத்தியும்கூட, கடைகளைத் திறக்க எவரும் முன்வரவில்லை. அர்த்தால் வெற்றிகரமாக முடிந்தது.

மருதாடு

பொது வேலைநிறுத்தம் மிகவும் அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது. எல்லாக் கடைகளும் மூடப்பட்டன. லாரி, பஸ், சைக்கிள், வண்டிகள் ஓடாமல் நின்றன. பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. தோழர்கள் மூவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். அர்த்தால் அமைதியாக நடைபெற்றது.

வெங்கடேசபுரம்

எல்லாக்கடைகளும் மூடிக்கிடந்தன. சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள், விவசாயத் தோழர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தனர்.

இப்பகுதியோடு இணைந்திருக்கும் சேனப்பநல்லூரிலும் கடைகள்மூடப்பட்டன.பள்ளிக்கு மாணவர்கள் செல்லவில்லை.

பிப். 19-ந் தேதி தோழர் ம. சோமசுந்தரம் போலீசாரால் கைது செய்யப்பட்டார். 20-ந் தேதி காலை தோழர்கள் பங்காருசாமி, வாசுதேவன் ஆகியோர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். இரவு 10 மணி அளவில் பங்காருசாமி, வாசுதேவன் இருவரும் போலீசாரால் விடுதலை செய்யப்பட்டனர். தோழர் சோமசுந்தரம் 22-2-56-ந் தேதி மாலை 4 மணியளவில் துறையூர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

கீரம்பூர்

விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோர் வேலை நிறுத்தில் பங்கேற்றனர்; கடைகள் மூடப்பட்டன. மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. பொதுவேலை நிறுத்தம் அமைதியாக நடைபெற்றது.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—5/56

உறுப்பினர் சேர்த்தல்

பொது வேலைநிறுத்தம் பற்றிய பணிகளில் கழகத் தோழர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டி நேர்ந்ததாலும், உறுப்பினர் சேர்க்கும் காலம் மேலும் சிறிதளவு நீடிக்க வேண்டும் என்று பல கிளைகள் விரும்பும் காரணத்தாலும் உறுப்பினர் சேர்க்கும் காலம் **18—3—56** வரையில் மட்டுமே நீடிக்கப்படுகிறது.

மார்ச்சுத் திங்கள் 12-ஆம் நாளிலிருந்து 18-ஆம் நாள் வரையில் உள்ள ஒரு வாரத்தை உறுப்பினர் சேர்க்கும் வாரமாகக்கொண்டு தகுதியுள்ள மிகவான உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபடும்படி கிளைக் கழகங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறோம்.

18—3—56-ஆம் நாளை உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகக்கொண்டு, 31-3-56-க்குள் உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்களைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கிளைக் கழகச் செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர்க்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும், கிளைக் கழகம்—மாவட்டக் கழகம் ஆகியவற்றிற்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும் மார்ச்சு 15-ஆம் நாளுக்குமேல் தொடர்ந்து தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பெறும்.

அறிவகம்
29—2—56
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

திருமணம்

புதுவைத் திருவள்ளுவர் நகரில் (சுண்ணாம்புக் கால்வாய்) தோழர் மா. முனிசாமி — தோழியர் ஆ. முனியம்மை வாழ்க்கை ஒப்பந்தம் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கு. முருகையன், ம கோயல், வழக்கறிஞர் காமு சதா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப் பெற்றோம் — நன்றி— பொறுப்பாளர்.

சென்னையில் அண்ணா அறைகூவல்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

காமராசர் கடைத் தெருக்களில் கொடிபிடித்துச் சென்ற காலத்தில்—கேவலமாக நான் அதைக் கருதுவதாக யாரும் கொள்ளக்கூடாது; பருவ வளர்ச்சிக்காக அதைக் குறிப்பிடுகிறேன்—ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றவர் பி. டி. இராசன்; அர்த்தால் நடத்தப்போவதாக அவர் அறிவித்த உடனே, அவரை அழைத்துப் பேசியிருந்தால், காமராசரிடம் அரசியல் நாகரீகம் இருப்பதாக நாம் கொள்ளமுடியும். 'காமராசர் அழைத்துப் பேசத் தகுதியான ஒருவர் வேண்டும்' என்பதற்காகவும் தானே இராசன் அவர்களைத் தலைவராக்கினோம்? இம்மாதிரியான காரியங்களுக்கு என்னை அழைத்துப் பேசவேண்டாம்; பெரியாரை அழைத்துப் பேசமாட்டார்—இது போன்ற காரியங்களுக்கு; ஜீவாவைக் கூப்பிடமாட்டார்—'அவர்கள் எல்லாம் கம்யூனிஸ்டுகள்' என்று கூறிடுவார்; ஆனால் பி. டி. இராசனிடம் காமராசர் காணும் குறை என்ன? அவரை அழைத்துச் சொல்வதுதானே சர்க்காரின் நியாயங்களை; விளக்குவது தானே, அர்த்தால் நடைபெற்றால் அமைதிக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களை? 'சட்டத்திற்கு என்ன பாதுகாப்பு?'—உத்தரவாதம் கேட்பதுதானே அவரிடம் காமராசர்! அதைச் செய்யவில்லை; நாமும் பொருட்படுத்தவில்லை; அர்த்தாலும் வெற்றிகரமாக நடைபெற்றது.

"இத்தனை பெரிய அர்த்தால் தமிழகமெங்கும் சிறிதும் அமைதி கெடாமல்—கலவரம் நிகழாமல்—குழப்பமேதுமின்றி நடைபெற்றது. இதற்குக் காரணம், பொறுப்புணர்ந்த பி. டி. இராசன்தான்; ஆகவே, அவருக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று ஒரு வார்த்தை சொன்னாரா, காமராசர்? காமராசருக்கு கண்ணியமிருந்தால், அதைச் செய்திருக்க வேண்டாமா?

"அந்த அளவு கண்ணியத்தை அவரிடம் எதிர்பார்ப்பது தவறு என்கிறீரா? தொலையட்டும்; வாயை மூடிக்கொண்டு சும்மாவாவது இருக்கக் கூடாதா? லயோலா கல்லூரியில்போய் 'என்ன மகாப் பெரிய அர்த்தால் நடத்திவிட்டார்கள்? அர்த்தாலினால் என்ன பலன் கிடைத்துவிட்டது?' என்று வேறு பேசியிருக்கிறார்.

"பலன் என்ன என்பதல்ல கேள்வி? 'அர்த்தால் ஏன் நடைபெற்றது?'—அதைச் சிந்திக்கவேண்டும், காமராசர்! அர்த்தால் எப்படி வெற்றிகரமாக நடைபெற்றது—அதை ஆராய வேண்டும் காமராசர்! அதை விடுத்து, பலன் என்ன என்று கேட்கிறார்.

"ஈஜிப்டு நாட்டுச் சிலையைப்போல் நானிருப்பேன்—சிரிப்பதாக நண்பர்களும், சீறுவதாக விரோதிகளும் எண்ணிக்கொள்ளட்டும்—என்று வாய்திறவாது இருந்தவர்தானே இந்தக் காமராசர்? இப்போது ஓடி ஓடிப்போய் அவரைப் பேசவைத்தது எது? நிமிடக் கணக்கில் பேசியறியாத காமராசர் 40 நிமிடங்கள் பேசினார் என்று செய்திவருகிறதே—அப்படிப் பேசவைத்தது அர்த்தால்தானே! அது அர்த்தால் தந்த பலன்தானே?"

—என்று, அண்ணா அவர்கள், சென்னை தி. மு. கழகத் திடலில் மார்ச் 10-ந் தேதியன்று நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசியதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகத்திற்கெனத் தனியாக வாங்கப்பட்டுள்ள திடலில் மக்கள் பெருவாரியாக அமர்ந்திருந்தால் அந்தக் காட்சி எவ்வளவு அழகாக இருக்கும் என்பதைப் பார்ப்பதற்காக இந்தக் கூட்டத்தை இங்கு நடத்த வேண்டுமென விரும்பினேன்.

"எதிர்பார்த்ததைவிட இங்கே நீங்கள் பெருவாரியாக அமர்ந்திருப்பது அழகாகத்தானிருக்கிறது; என்றாலும், பக்கத்திலேயே ஆபத்தும இருக்கிறது. மின்சார இரயில்கள் இங்குமங்குமாக அடிக்கடி போய்க்கொண்டிருக்கின்றன.

"கழகத்தின் எழிலை இதுபோல நாம் வளர்த்துக்கொள்ளவும் முடியும், நாம் எதிர்பார்க்கிற வகையில்; அதே போது, அருகிலிருக்கும் இரயில் பாதையைப் போல, 'ஆபத்து' வந்தாலும் அதையும் சமாளித்துக்கொள்ளவும் முடியும் என்ற வகையில் நீங்கள் நடந்துகொள்ளவேண்டும்.

"தி. மு. கழகம் சர்வகட்சிக் கூட்டணியில் ஈடுபட்டு, அதன் முயற்சியில் நல்ல வெற்றியும் பெற்றிருப்பதற்குத் தன்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொள்ளவும், கூட்டணியின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து பிப். 20-ல் நடைபெற்ற அர்த்தாலில் வெற்றிகரமாக ஈடுபட்டு கழகத்திற்குக் களங்கமில்லாத கீர்த்தியைத் தேடித்தந்த எண்ணற்ற கழகத் தோழர்களுக்கு, கிளைக் கழக உறுப்பினர்களுக்கு நன்றிகூறிக் கொள்ளவுமதான் இந்தக் கூட்டம்.

"பிப். 20-ல் கழகத் தோழர்கள் ஆற்றியுள்ள பெரும்பணியையும் அதனால் கிடைத்துள்ள மகத்தான வெற்றியையும், அதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் உணரவேண்டுமானால் இதுவரை இந்த நாட்டிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றி, எத்தனையோ அறப் போராட்டங்கள் பற்றி வகை வகையான கிளர்ச்சிகள் பற்றி, எதுவுமே பேசாதிருப்பதுதான் பெரிய இடத்திற்குஇலட்சணம் என்ற தத்துவத்தில் நம்பிக்கைவைத்து எதுவுமே பேசாதிருந்த பிரதமர் நேரு பாராளுமன்றத்தில் பேசும்போது — அண்மையில் பேசும்போது, தமிழ் நாட்டில் பிப். 20-ல் நடைபெற்ற அர்த்தால் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக் காண வேண்டுகிறேன்.

"பண்டித நேரு, பிப். 20-ல் தமிழ் நாட்டில் அர்த்தால் நடைபெற்றது என்று மட்டும் குறிப்பிடவில்லை; 'இந்தியாவிலிருந்து தமிழ் நாட்டைத் துண்டாட வேண்டும் என்று கோருகிற ஒரு கட்சியினர் இந்த அர்த்தாலை நடத்தியிருக்கிறார்கள்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"பண்டித நேரு அப்படிக் குறிப்பிட்டதும், இங்கு பிப். 20 அர்த்தாலை நடத்திய சர்வகட்சிக் கூட்டணி, 'பிப். 20 அர்த்தால், தமிழ் நாட்டை இந்தியாவிலிருந்து துண்டாட வேண்டும் என்பதற்காக அல்ல; கூட்டணி, தமிழ் நாட்டை இந்தியாவிலிருந்து பிரிப்பதற்காக அல்ல,' என்று அறிக்கை விடுத்தனர்.

"இந்த அறிக்கையை வைத்துக்கொண்டு, 'கூட்டணியில் பிளவு ஏற்பட்டுவிடும்' என்று பலர் தப்பாகக் கணக்குப் போட்டார்கள் — எதிர்பார்த்தார்கள்.

"கூட்டணித் தலைவர் அவ்வாறு அறிக்கை விடுத்ததும், நடுவில் நாம், 'அல்ல, அல்ல; பிப். 20 அர்த்தாலை நடத்தியது நாங்கள்தான்; நாங்கள் பிரிவினை கோருபவர்கள்தான்' என்று கூறுவோம்—கூட்டணி உடைந்துபடும என்று அவர்கள் தப்புக் கணக்குப் போட்டார்கள். நேரு பண்டிதரும், அவரைப் பார்த்து நேராக அதே வழி செல்லும் காமராசரும், கூட்டணியில் அமளி ஏற்படுத்த நினைத்தார்கள்; ஆனால் அது நடைபெறவில்லை.

கூட்டணித் தலைவர், ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தக்காரர் என்ற வகையிலேகூட, அதிகமான பண்பு பெற்றவர். அதனாலேயேதான், அதிதீவிரமான திட்டம் வைத்திருப்பவர்கள் எனக் கூறப்படும கம்யூனிஸ்டுகளும், 'அவர்கள் திட்டத்திற்கு நகல் எங்களிடமுள்ளது' என்று கூறுபவர்களாகக் கருதப்படும் சோஷலிஸ்டுகளும், அவர்களுக்கு முன்பாகவே தோன்றியவர்கள் நாங்கள் என்று கூறும பிரஜா-சோஷலிஸ்டுகளும், இன்னபிற கட்சியினரும சேர்ந்த கூட்டணியை அவர் திறம்பட நடத்த முடிகிறது.

"கூட்டணிக்குத் தலைவராக பி. டி. இராசன் அவர்கள் வாய்த்ததை பண்டித நேரு எண்ணிப் பார்ப்பாரேயானால், கூட்டணியின் சிலாக்கியத்தை அவராலே உணர முடியும். பி. டி. இராசன் அவர்களைத் தலைவராக்கிய நேரத்தில்—நான் பெருமைக்காகக் கூறவில்லை—எங்கள் உள்ளத்திலேயிருந்த கண்ணியத்தை ஆட்சியிலிருப்போர் உணர்ந்தாகவேண்டும்.

"நடைபெற்ற அர்த்தாலை தமிழரசுக் கழகமோ, தி. மு. கழகமோ, அல்லது கம்யூனிஸ்டுகளோ, அல்லது இதர கட்சியினரோ தனித்து, இதர கட்சிகளைச் சேர்க்காமல் நடத்தியிருந்தால், வேண்டுமானால் இத்தனை விமரிசையாக நடத்தியிருக்க முடியாது; ஆனால் நடத்தியிருக்க முடியும். தனித் தனியாகக் கட்சிக்காரர்கள் நடத்தி தங்கள் தங்கள் கட்சிக்கென கீர்த்தி தேடிக்கொள்ளாமல் இருந்த எங்களது அடக்க உணர்ச்சியை, அதனுள்ளே புதைந்திருக்கும் அரசியல் நாகரீகத்தைக் காமராசர் அறிந்துகொள்ளவேண்டும் — புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

"கூட்டணிக்குத் தலைவராக வேண்டுமென ம. பொ. சி. விரும்பியிருந்தால் நாங்கள் சம்மதித்திருப்போம்; நான் தலைவராக இருக்க வேண்டுமென ம. பொ. சி. கேட்டிருந்தால் அங்கு மறுப்பாரில்லை, என்னைத் தவிர; ஜீவா கேட்டிருந்தால், நாங்கள் எல்லாம் விட்டுக்கொடுத்திருப்போம்; அந்தோணி பிள்ளை விரும்பியிருந்தாலும் அப்படித்தான்; என்றாலும், இத்தனை கட்சிகளின் முக்கியமானவர்களான நாங்கள் எல்லாம் ஒதுங்கிக்கொண்டு, 'அரசியல் கண்ணியம் எங்கே இருக்கிறது? அரசியல் நாகரீகம் எங்கே இருக்கிறது? தமிழ் நாட்டின் பண்பு எதிலே இருக்கிறது?'—என்று தேடித் தேடிக் கண்டறிந்து, திரு. பி. டி. இராசன் அவர்களைத் தலைவராக்கினோம். இதனை உணர வேண்டியது ஆட்சியாளரின் கடமை அல்லவா?

(அவரது சொற்பொழிவு முடியவில்லை. தொடர்ந்துவரும்)

இருங்களூருக்கு அண்ணா நெடுஞ்செழியன் வருகை

★

இருங்களூர் புதிய தரங்கைப் போதனாமுறைப்பள்ளி மாணவர் தமிழ் இலக்கியக் கழகங்களின் 3-வது ஆண்டு விழா 14—3—56 மாலை 4 மணியளவில், திரு. வி. ஜி. இராசையா தலைமையில் நடைபெறும்.

அண்ணா அவர்கள் 'ஆசிரியரும் சமூகமும்' என்ற தலைப்பிலும், இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'நாமும் தமிழும்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றுவர்.

ஆலங்குடிக்கு அண்ணா வருகை

★

தஞ்சை மாவட்டம் நீடாமங்கலம் அடுத்துள்ள ஆலங்குடிக்கு, 15—3—56 மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்துகொள்வார்.

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு:

★

14—3—56 மாலை 7 மணியளவில், கழகப் பணிமனையில் (1, குப்பையர் தெரு, 8-வது வட்டம்) செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

நினைவில் தங்கும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அர்த்தாலின்போது சட்டசபை உறுப்பினர்களின் போக்கு எப்படி இருந்தது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டினார் தோழர் ஏ. கோவிந்தசாமி எம் எல்.ஏ.

நடிப்பு இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, நடிகர்கள் அர்த்தாலுக்கு ஒத்துழைப்பு நல்கியதற்குக் கழகச் சார்பில் நன்றி கூறினார்.

இறுதியாக அண்ணா அவர்கள், அர்த்தாலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள நிலைகளைப் பொதுவாக விளக்கினார்.

அண்ணா அவர்கட்குப் பச்சையப்பன் கல்லூரி தி. மு. கழக மாணவர் கிளையின் சார்பில் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

பொதுச்செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது

கூட்டத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்வதில் தலைமை நிலையத்தாருடன், சென்னை மாவட்டத் தோழர்கள் உடன் நின்று முழு ஒத்துழைப்பும் தந்தனர்.

கூட்டம் சிறப்புடன் நடைபெற தோழர்கள் கே. எம். கண்ணபிரான், கின்னி வளவன், வி. முனுசாமி எம்.சி, சென்னை மாவட்டச் செயலாளர் இளம்பரிதி, சோ செங்குட்டுவன் முதலானோர் முன்னின்று அரும்பணி ஆற்றினர்.

(ர. கி.)

கழகக் கூட்டம்

★

பாண்டமங்கலம்:

சோமசுந்தரம் திடலில்

14-3-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர்:

என். சோக்கலிங்கம்

பேசுவோர்:

சிற்றுளி-ஏ. சுப்ரமணியம்

வி. ஏ. இராமநாதன்

வி. கே. இராசு

கே. பி. கந்தசாமி

சேலம் நகர தி. மு. கழக உட்கிளை செயலாளர்களுக்கு

"இத்திங்கள் 12-ந் தேதி முதல் 18—3—56-ந் தேதிவரையில் உள்ள ஒரு வாரத்தில் ஒவ்வொரு கிளைக் கழகச் செயலாளரும் உறுப்பினர்கள் சேர் பதில் முயற்சி எடுக்க வேண்டுமென்றும், சேர்த்த படிவங்களை என்னிடம் நேரில் கொண்டுவந்து கொடுக்க வேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதிக உறுப்பினர்கள் சேர்க்கும் கிளைக் கழகத்திற்குப் பரிசு வழங்கப்படும்,"

என்று, செயலாளர் இ ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

'வானப்பிரஸ்த ஆசிரமம்'

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

'வானப்பிரஸ்த சேவா சமாஜம்' என்ற பெயரில், ஆயிரம் உறுப்பினர்கள் சேர்ந்தவுடன், தங்கள் சங்கத்தைப் பதிவு செய்ய ஆசிரம அமைப்பாளர்கள் திட்டமிட்டிருக்கின்றனராம்!

ஏதேனும் ஊனமுடையவர்கள் இலவசமாகத் தங்கிக் காலம் கழிப்பதற்கான 'ஆஷத்த ஆசிரமம்' ஒன்று அமைக்கவும் திட்டமிட்டிருக்கிறார்களாம்!

சிறையில் அரசியல்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது. அவர்களைக் 'குற்றவாளிகள்' என்று கண்டுபிடிக்கும் வகையில், அவர்களுக்கு வேண்டிய சலுகைகளைச் செய்துகொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதை உணர்ந்து, நிதி அமைச்சர் அவர்கள் வேண்டியதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

"மத்திய சிறைகளில் வார்டர்கள் வாங்கும் சம்பளம் குறைவாக இருக்கிறது. அவர்களுடைய சம்பளத்தைக் கூட்டிக்கொடுக்கவேண்டும். வார்டர்களை 'அரை குற்றவாளி'கள் என்றுகூட சொல்லலாம். இப்பொழுது போலீஸ்காரர் பிள்ளைகளுக்குக் கொடுக்கக்கூடிய கல்வி, சம்பளச் சலுகை போன்ற சலுகைகளை இவர்களுக்கும் கொடுக்கவேண்டும். இப்பொழுதுள்ள மந்திரிகளில் கனம் சுப்பிரமணியம் அவர்கள்தான் சிறை அனுபவம் அதிகம் உள்ளவராக இருக்கிறார். அதனால் அதற்கு வேண்டிய பரிகாரம் அவர் செய்து கொடுக்கவேண்டும்.

"பார்வையாளர்கள் சிறைக்கு வந்தால், அவர்கள், அரசியல் கைதிகளைப் பார்ப்பதற்கு எந்த நேரத்திலும் அனுமதிக்கவேண்டும். இப்படியெல்லாம் வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் கைதிகளுக்கு, 'ஜனநாயக சர்க்கார் நடக்கிறது; தங்களைக் குற்றவாளிகள் என்று கருதாத அரசாங்கம் நடைபெறுகிறது' என்ற எண்ணம் தோன்றும்; அந்த முறையில் அவர்களை நடத்தவேண்டும். பழி வாங்கும் அளவில் அவர்களுடைய சலுகைகளை புறக்கணிக்கக் கூடாது."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.